மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2024 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் ஆவணித்திங்கள்12 ம் நாள்

**இடைநிலை மனு எண். 59/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 52/2018**

1.வீரம்மாள்(இறந்தார்)

2.கோமதி

3.ரவிச்சந்திரன்

4.வீரப்பன் ... மனுதாரர்கள்/வாதிகள்

( Lrs of the deceased Plaintiff)

**//எதிர்//**

ராதாகிருஷ்ணன் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. பொன்னுலிங்கம் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. V.K. சண்முகா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் வாதி இறந்ததாக தெரியவந்த 11.08.2021ம் தேதியிலிருந்து சட்டப்படியான 90 நாட்கள் காலக்கெடுவில் வாரிசுகள் மனு தாக்கல் செய்யப்படாததால் வாதியை பொறுத்து வழக்கு (abate) அற்றுப்போய்விட்டதை ரத்து செய்து வாரிசு மனுவை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல்

நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 9(ii) மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் 2 ம் மனுதாரர் , அசல் வழக்கில் இறந்த வாதியின் வாரிசு ஆவார். இம்மனுவானது வாதியின் வாரிசு 3 மற்றும் 4 மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு வாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் வாதி கடந்த 30.07.2021ம் தேதியன்று இறந்துவிட்டார். மேற்படி வாதியின் சட்டப்படியான வாரிசுகளை சேர்ப்பதற்கு மனு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வாதி வீரம்மாள் கடந்த 30.07.2021ம் தேதியன்று இறந்த விபரம் சமூகம் நீதிமன்றத்தில் பதிவு செய்த 11.08.2021ம் தேதியிலிருந்து சட்டப்படியான 90 நாட்கள் காலக்கெடுவில் வாரிசுகள் சேர்க்க மனு தாக்கல் செய்யப்படாததால் வாதியை பொறுத்து வழக்கு (abate) அற்றுப்போய்விட்டதை ரத்து செய்து வாரிசு மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

**3. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

இம்மனுவின் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். 1ம் வாதி இறந்து இறந்து பல நாட்கள் காலதாமதமாகி உள்ளது. குறிப்பிட்ட காலத்திற்குள் வாரிசு சேர்க்க மனு கொடுக்காமல் பல நாட்கள் காலதாமதப்படுத்தி வழக்கை இழுத்தடித்து எதிர்மனுதாரர்/பிரதிவாதியை ஏமாற்றி மோசடி செய்ய வேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்/வாதி தாக்கல் செய்யப்பட்ட காலதாமத மனு, அபேட்மெண்டை ரத்து

செய்ய மனு மற்றும் வாரிசு சேர்க்க வேண்டி மனு இவை அனைத்தும் ஒரே நேரத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது வாரிசு சேர்ப்பதில் அற்றுப்போய்விட்ட சூழ்நிலையில் அபேட்மெண்டை ரத்து செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது ஏற்புடையது அல்ல. ஆகவே, இடை நிலை மனு IA.58/2024, I.A.59/2024, IA.60/2024 ஆகிய மூன்று மனுக்களும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

**4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**தீர்வு:**

1. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, நிரூபண வாக்குமூலம் , எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

2. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

3. இம்மனுவினை பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம்கோரி தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வரும் நிலையில் வாதி வீரம்மாள் கடந்த 30.07.2021ம் தேதியன்று இறந்த விபரம் சமூகம் நீதிமன்றத்தில் பதிவு செய்த 11.08.2021ம் தேதியிலிருந்து சட்டப்படியான 90 நாட்கள் காலக்கெடுவில் வாரிசுகள் சேர்க்க மனு தாக்கல் செய்யப்படாததால் வாதியை பொறுத்து வழக்கு (abate) அற்றுப்போய் விட்டதை ரத்து செய்து வாரிசு மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டி என்றும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ள போதும், நீதியின் நலன் கருதி மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவது

இல்லை. எனவே, இம்மனுவை நீதியின் நலன் கருதி உரிய நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில்,** இம்மனுவின் மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ. 500/-ஐ வரும் 30.08.2024 தேதிக்குள் நேரடியாக செலுத்தி வைக்கவேண்டும் என்றும் தவறும் பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 30.08.2024

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (28.08.2024) அவையறியப் பகரப்பட்டது.

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.08.28 20:12:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.08.28 20:12:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.